## சுருக்கம்

திட்டங்கள் – புதிய மாநில திட்டம் – அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – நிதிநிலையில் நலிவடைந்த 30 நகராட்சிகளில் 2008–2009 மற்றும் 2009–10 ஆண்டுகளில் செயல்படுத்துதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (நிலை) எண்: 232 நாள் 19.11.2008

திருவள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 4

படிக்க:

1. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.27620/பி2/2008 நாள் 2.07.2008 மற்றும் 19.7.2008.
2. அரசு கடிதம் எண்.14839/நநி.5/2008–5 நாள் 13.10.2008.
3. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் 27620/பி2/2008 நாள் 28.10.2008.
4. அரசு கடிதம் எண்.14839/நநி.5/2008–5 நாள் 4.11.2008.
5. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் 27620/பி.2/2008 நாள் 8.11.2008.

---

ஆணை:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான 2008–2009 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண்.34–ன் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் "ஊராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் தற்போது சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும், 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' போன்ற ஒரு திட்டத்தை, நிதி நிலையில் நலிந்த 30 நகராட்சிகளில், ஒவ்வொரு நகராட்சியிலும் 75 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற பெயரில் செயல்படுத்தப்படும்" என்று அறிவித்தார்கள்.

2. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான விரிவான கருத்துருக்களை முதலாவது, மூன்றாவது மற்றும் ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார். இத்திட்டத்தின் கீழ் நிதி நிலையில் நலிந்த நகராட்சிகளை தேர்வு செய்ய நகராட்சிகளில் பெறப்படவேண்டிய வருவாய் (Collectible Demand) அடிப்படையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு அதாவது 2005–06, 2006–07 மற்றும் 2007–08 ஆண்டுகளுக்கு பெறப்படவேண்டிய வரிவருவாய் (Tax Revenue Demand) மற்றும் பெறப்படவேண்டிய வரியில்லா வருவாய் (Non-Tax Revenue Demand) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இதில் ஆண்டு சராசரித் தொகையை கணக்கிட்டு அதனை 2001–ஆம் ஆண்டின் மக்கள் தொகையால் வகுத்து வரும் ஈவுத் தொகையின் அடிப்படையில் மிகக்குறைந்த தனிநபர் வருமானமுள்ள 30 நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிலையில் நலிந்த 30 நகராட்சிகளில் 'அண்ணா மறு மலர்ச்சித் திட்டம்' என்ற புதிய திட்டத்தினை 2008-2009 மற்றும் 2009-2010 ஆண்டுகளில் செயல்படுத்தவும், ஒவ்வொரு நகராட்சிக்கும் தலா ரூ. 75 இலட்சம் வீதம் (ரூபாய் எழுபத்தி ஐந்து இலட்சங்கள்) மொத்தம் ரூ.22.50 கோடி (ரூபாய் இருபத்தி இரண்டு கோடியே ஐம்பது இலட்சங்கள் மட்டும்) ஒப்பளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. இப்புதிய திட்டம் கீழ்க்காணும் முறையில் செயல்படுத்த ஆணைகள் வெளியிடப்படுகிறது:-

<u>நிதி ஒதுக்கீடு:</u>

அ) 2008-2009 மற்றும் 2009-10 ஆண்டுகளில் பெறப்பட வேண்டிய வருவாய்களின் அடிப்படையில் (Collectible Demand) நகராட்சி நிர்வாக ஆணையரால் தேர்வு செய்யப்பட்டுள்ள நிதி நிலையில் மிகவும் நலிந்த இணைப்பில் கண்டுள்ள 30 நகராட்சிகளில், ஒவ்வொரு நகராட்சிக்கும் ரூ.75.00 இலட்சங்கள் வீதம் மொத்தம் ரூ.22.50 கோடி செலவில் 2008-2009 மற்றும் 2009-2010 ஆகிய ஆண்டுகளில் திட்ட பணிகளை செயல்படுத்த வேண்டும்.

ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள இத்திட்டத்திற்கான மொத்த செலவில் 50% தொகையான ரூபாய் 11.25 கோடியினை, (பதினொன்று கோடியே இருபத்தி ஐந்து இலட்சங்கள் மட்டும்) அரசின் நிதி ஆதாரமாகவும் இதர 50% தொகையான ரூபாய் 11.25 கோடியினை , (பதினொறு கோடியே இருபத்தி ஐந்து இலட்சங்கள் மட்டும்) மாநில நிதி குழு நிதியிலிருந்தும் (State Finance Commission Devolution Fund) மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்தும் (Infrastructure Gap Filling Fund/ Entertainment Grant Compensation Fund) பெற்றுக் கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது. அரசு வழங்கும் நிதி ஆதார தொகை ரூபாய் 11.25 கோடியில் (பதினொன்று கோடியே இருபத்தி ஐந்து இலட்சங்கள் மட்டும்) 2008-2009-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 6 கோடியினை (ரூபாய் ஆறு கோடி மட்டும்) விடுவிக்கவும் மீதமுள்ள ரூ.5.25 கோடியினை (ஐந்து கோடியே இருபத்தைந்து இலட்சங்கள் மட்டும்) 2009-2010 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யவும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4 (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள 2008-2009-ம் ஆண்டிற்கான அரசின் நிதி உதவி ரூபாய் 6 கோடியினை (ரூபாய் ஆறு கோடி மட்டும்) கீழ்கண்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

அ) 2217 – நகர் பகுதி வளர்ச்சி – 05 ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள் – 192 நகராட்சிகள் நகராட்சி மன்றங்கள் முதலியவற்றிற்கு நிதியுதவி – II மாநிலத் திட்டம் JI பொருளாதார ரீதியாக நலிவடைந்த நகராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை செயல்படுத்துதல் – 09 உதவி மானியங்கள் – 02 மூலதன செலவுக்கான மானியங்கள் (த.தொ.கு. 2217 05 192 JI 0920)

ஆ) மாநில நிதி குழு நிதியிலிருந்தும் (State Finance Commission Devolution Fund) மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையிலிருந்தும் (Infrastructure Gap Filling Fund/ Entertainment Grant Compensation Fund) விடுவிக்கப்பட வேண்டிய தொகை ரூபாய் 11.25 கோடியினை, (ரூபாய் பதினொறு கோடியே இருபத்தி ஐந்து இலட்சங்கள் மட்டும்) குறித்து தனியே ஆணைகள் வெளியிடப்படும்.

6. மேற்சொன்ன புதிய கணக்குத் தலைப்பிற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, மதிப்பீட்டு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

7. கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பினைத் தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை நகராட்சிகளில் செயல்படுத்தும் போது ரூ.75இலட்சத்தினை கீழ்க்கண்ட பணிகளுக்காக செலவு செய்தல் வேண்டும்:-

<u>மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்</u>

| வ.எண் | முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொரு நகராட்சியிலும் மேற்கொள்ள வேண்டிய பணிகளின் விவரம் | தொகை (ரூபாய் இட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **குடிநீர் விநியோகம் (25% )** | 18.75 |
| அ | பைப்லைன் அமைத்தல் | |
| ஆ | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல் | |
| இ | நீர்நிலை மேம்படுத்துதல் | |
| 2 | **கட்டிடம் கட்டுதல் (20 % )** | 15.00 |
| அ | நகராட்சி அலுவலகம் கட்டுதல் | |
| ஆ | சமுதாய கூடம் கட்டுதல் | |
| இ | கணினி மையம் கட்டுதல் | |
| 3 | <u>**பேருந்து நிலையம் அபிவிருத்தி செய்தல் (10 % )**</u> | 7.50 |
| அ | பேருந்து நிலையத்தினுள் சாலை அமைத்தல் | |
| ஆ | கழிப்பிடம் கட்டுதல் | |
| 4 | <u>**சாலை மற்றும் மழைநீர் வடிகால்( 25% )**</u> | 18.75 |
| அ | சாலை அமைத்தல் | |
| ஆ | மழைநீர் வடிகால் அமைத்தல் | |
| இ | சிறுபாலம் அமைத்தல் | |
| 5 | <u>**இதர பணிகள் (20 % )**</u> | 15.00 |
| அ | பூங்கா அமைத்தல் | |
| ஆ | பொதுக்கழிப்பிடம் கட்டுதல் | |
| இ | தெருவிளக்கு மற்றும் உயர்மின் கோபுர விளக்கு அமைத்தல் | |
| ஈ | பேருந்து நிழற்குடை அமைத்தல் | |
| உ | சுடுகாடு, இடுகாடு செல்லும் சாலை அமைத்தல் | |
| | மொத்தம் | 75.00 |

9. இத்திட்டத்தினை கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் செயல்படுத்தவும் அரசு ஆணையிடுகிறது:—

நிபந்தனைகள்

1. இத்திட்டத்திற்கான நிதியிலிருந்து மின் கட்டணம் செலுத்துதல், பொது பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளக் கூடாது;

2. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கென தனியே வங்கி கணக்கு துவங்கப்பட வேண்டும்;

3. வேலை நடைபெறும் இடங்களில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், வேலைக்கான ஒப்பந்தக்காரர் பெயர், மதிப்பீடு, வேலையின் பெயர், ஒப்பந்தக்காலம் போன்ற விவரங்களடங்கிய விளம்பரப் பலகை தவறாமல் வைக்கப்பட வேண்டும்;

4. ஒவ்வொரு நகராட்சி அலுவலக வளாகத்திலும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவுள்ள அனைத்து வேலைகளின் பெயர், ஒப்பந்தக்காரரின் பெயர், வேலையின் மதிப்பு, காலம் ஆகியவைகளடங்கிய தகவல் பலகைகள் அமைத்தல் வேண்டும்;

5. ஒரே வேலையை சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து (Piecemeal ) மேற்கொள்ளக் கூடாது;

6. உருவாக்கப்பட்ட சொத்துக்கள், உரிய சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டு சான்று அளிக்கப்பட வேண்டும்;

7. வேலைகள், திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இறுதி செய்யப்பட வேண்டும்;

8. அண்ணா மறுமலர்ச்சி திட்டம் குறித்து திட்டமிடுதல், ஒப்புதல் பெறுதல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், செயல்படுத்துதல், முடிவறிக்கை, பயனீட்டுச்சான்று ஆகியவை குறித்து அறிக்கை அந்த ஆண்டிலேயே முடிக்கப்பட வேண்டும்;

9. இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு அதிக நிதி தேவைப்படின் வேறு திட்டங்களின் கீழ் பெறப்படும் நிதியினையோ அல்லது பொது நிதியையோ ஒருங்கிணைத்து செயல்படுத்தலாம்;

10. இத்திட்டத்தின் கீழ் நகர்மன்றம் 30 நாட்களுக்குள் செயல்படுத்தவுள்ள பணிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்;

11. தெருவிளக்கு மற்றும் உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட வேண்டுமெனில் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ஏதும் நிலுவை இருக்கக் கூடாது.

12. மேற்குறிப்பிட்ட பணிகளில் சில பணி இனங்களை செய்ய இயலவில்லையெனில் ஒரே இனத்தின்கீழ் எடுத்துச் செய்யலாம். இதற்குரிய காரணங்களின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையருக்குத் தெரிவித்து சிறப்பு அனுமதி பெற வேண்டும்.

13. இத்திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதியை சம்பந்தப்பட்ட நகர் மன்றங்கள் 30 நாட்களுக்குள் அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கவில்லையெனில், மானியத்தொகை வேறு நகராட்சிக்கு மாற்றப்படும்.

14. இத்திட்டத்தின் கீழ் கட்டப்பட உள்ள கழிப்பிடங்கள் உலகத் தரம் வாய்ந்த நவீன அமைப்புடன் சுகாதார முறைப்படி அனைத்து வசதிகளும் இருக்க வேண்டும்.

15. கட்டப்பட உள்ள பூங்காக்களில் தேவையான இடம் உள்ள இனங்களில் இளைஞர் விளையாட்டு மையம் மற்றும் சிறுவர்கள் பொழுதுபோக்கு மையம் அமைக்க வேண்டும். பூங்காக்கள் கட்டப்பட்டவுடன் இவைகளை தொண்டு நிறுவனங்கள் அல்லது தன்னார்வ நிறுவனங்கள் பராமரிக்க ஏதுவாக நகராட்சி ஆணையர்கள் / செயல் அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

10. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் புதிய பணித் (New Service) திட்டமாக கருதப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி சில்லரைச் செலவின நிதியிலிருந்து முதலில் இச்செலவினத்தை ஏற்க முன்பணம் கோரும் கருத்துருவை உரிய படிவத்தில் அரசின் நிதி வரவு செலவு (பொது 1) துறைக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இச்செலவினத்திற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறவேண்டி, 2008–2009ஆம் ஆண்டு துணை மதிப்பீட்டில் இச்செலவினத்தை சேர்ப்பதற்காக உரிய கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

11. இத்திட்டத்திற்காக அரசு அளிக்கும் மானியத் தொகையினை இணைப்பில் கண்டுள்ள 30 நகராட்சிகளுக்கு பிரித்து வழங்கவும், இத்திட்டத்தின் செயல்பாட்டிற்கு தேவையான கூடுதல் நெறிமுறைகள் வெளியிடவும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து காலாண்டு அறிக்கை ஒன்றினை துறைத்தலைவர் அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

12. 2009–2010ஆம் ஆண்டுக்கான நிதியை விடுவிக்க தேவையான கருத்துருக்களை அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

13. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.2797/FS/P/08 நாள் 18.11.2008 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1252 (ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து இரண்டு) ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –600 005.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
(தஞ்சாவூர்/திருநெல்வேலி/செங்கற்பட்டு/சேலம்/மதுரை/கோயம்புத்தூர்)
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை – 600 108.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை– 600 005.
மாநில தலைமை கணக்காயர் (A&E) சென்னை– 600 018.
மாநில கணக்காயர் (Audit) சென்னை–600 018.
மாநில கணக்காயர் (CAB), சென்னை – 600 009.

நகல்:
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை –600 005.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை– 600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 600 009.
நிதி (ந.நி(ம)கு.வ/நிகு IV /வரவு செலவு பொது I/வரவு செலவு பொது II/ வரவு செலவு ஓ/ துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை– 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 19/11/08

# இணைப்பு

| வ.எண் | நகராட்சியின் பெயர் | நிலை | 2005–06 வரி மற்றும் வரியில்லா வருவாய் | 2006–07 வரி மற்றும் வரியில்லா வருவாய் | 2007–08 வரி மற்றும் வரியில்லா வருவாய் | மொத்த கேட்பு (3 ஆண்டுகள்) | சராசரி கேட்பு (ரூபாய் லட்சத்தில்) | 2001ஆம் ஆண்டு மக்கள் தொகை | தனி நபர் வருமானம் (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் லட்சத்தில்) | | | | | | |
| 1. | நெல்லியாலம் | நிலை–3 | 33.40 | 32.06 | 32.21 | 97.67 | 32.56 | 41837 | 77.82 |
| 2. | பேர்ணாம்பட்டு | நிலை–3 | 48.87 | 51.52 | 37.30 | 137.49 | 45.83 | 41493 | 110.44 |
| 3. | கீழக்கரை | நிலை–3 | 30.16 | 44.95 | 39.46 | 114.57 | 38.19 | 30412 | 125.58 |
| 4. | வால்பாறை | நிலை–3 | 124.72 | 76.30 | 159.51 | 360.53 | 120.18 | 95107 | 126.36 |
| 5. | அனகாபுத்தூர் | நிலை–3 | 39.91 | 39.79 | 56.70 | 136.40 | 45.47 | 31918 | 142.45 |
| 6. | திருத்தங்கல் | நிலை–3 | 69.76 | 76.84 | 81.14 | 227.74 | 75.91 | 49160 | 154.33 |
| 7. | வேதாரண்யம் | நிலை–3 | 53.32 | 55.63 | 44.21 | 153.16 | 51.05 | 33627 | 161.42 |
| 8. | இராமேஸ்வரம் | நிலை–3 | 53.85 | 52.30 | 79.20 | 185.35 | 61.78 | 37968 | 162.72 |
| 9. | ஜோலார்பேட்டை | நிலை–3 | 51.20 | 42.70 | 42.51 | 136.41 | 45.47 | 27167 | 167.37 |
| 10. | மேல்விஷாரம் | நிலை–3 | 74.48 | 76.38 | 54.29 | 205.15 | 68.38 | 36757 | 186.04 |
| 11. | பள்ளிப்பாளையம் | நிலை–3 | 62.17 | 66.29 | 72.26 | 200.72 | 66.91 | 35635 | 187.76 |
| 12. | புளியங்குடி | நிலை–3 | 102.68 | 111.58 | 126.61 | 340.87 | 113.62 | 60060 | 189.12 |
| 13. | தாராபடவேடு | நிலை–3 | 63.70 | 51.91 | 59.68 | 175.29 | 58.43 | 30070 | 194.31 |
| 14. | துவாக்குடி | நிலை–3 | 45.79 | 94.52 | 75.48 | 215.79 | 71.93 | 35428 | 203.03 |
| 15. | அவனியாபுரம் | நிலை–3 | 133.20 | 105.24 | 87.06 | 325.50 | 108.50 | 53006 | 204.69 |
| 16. | கடையநல்லூர் | நிலை–2 | 143.66 | 169.74 | 185.3 | 498.70 | 166.23 | 75612 | 219.85 |
| 17. | வீரப்பன்சத்திரம் | நிலை–3 | 150.68 | 160.97 | 173.08 | 484.73 | 161.58 | 72703 | 222.24 |
| 18. | வெள்ளகோவில் | நிலை–3 | 79.13 | 80.07 | 80.18 | 239.38 | 79.79 | 34438 | 231.70 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19. | கூடலூர்(மதுரை) | நிலை–3 | 123.32 | 63.72 | 62.98 | 250.02 | 83.34 | 35531 | 234.56 |
| 20 | நெல்லிக்குப்பம் | நிலை–2 | 99.60 | 105.71 | 110.26 | 315.57 | 105.19 | 44222 | 237.87 |
| 21. | நரசிங்கபுரம் | நிலை–3 | 41.57 | 47.68 | 45.71 | 134.96 | 44.99 | 18690 | 240.70 |
| 22. | ஜெயங்கொண்டம் | நிலை–3 | 74.35 | 78.83 | 77.95 | 231.13 | 77.04 | 31268 | 246.40 |
| 23. | ஆவணியூர் | நிலை–3 | 95.90 | 65.86 | 129.71 | 291.47 | 97.16 | 38310 | 253.61 |
| 24. | காயல்பட்டினம் | நிலை–3 | 85.54 | 84.58 | 87.79 | 257.91 | 85.97 | 32864 | 263.19 |
| 25. | மதுரவாயல் | நிலை–3 | 107.65 | 144.45 | 110.78 | 362.88 | 120.96 | 43609 | 277.37 |
| 26. | திருப்பரங்குன்றம் | நிலை–3 | 122.30 | 97.75 | 106.14 | 326.19 | 108.73 | 39048 | 278.45 |
| 27. | போடிநாயக்கனூர் | நிலை–1 | 181.44 | 203.63 | 233.04 | 618.11 | 206.04 | 73410 | 280.67 |
| 28. | ஓரம்பட்டி | நிலை–3 | 82.10 | 91.54 | 101.54 | 275.18 | 91.73 | 31948 | 287.11 |
| 29. | திருவேற்காடு | நிலை–3 | 88.73 | 96.42 | 93.55 | 278.70 | 92.90 | 32221 | 288.32 |
| 30. | ஸ்ரீவில்லிபுத்தூர் | நிலை–1 | 206.42 | 218.21 | 224.44 | 649.07 | 216.36 | 73183 | 295.64 |

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 19/11/08